# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

## தஞ்சாவூர்













## கலை நிகழ்ச்சிகள்

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு
## தஞ்சாவூர்



## கலை நிகழ்ச்சிகள்

1995 சனவரி

1 முதல் 5 வரை



''இசையினால் ஈர்க்கப் படாதவர் எவரும், மனித வாழ்வில் சிறந்த பண்புகள் பலவற்றை, முழுமையாக உணர இயலாதவர்கள், என்பதே எனது கருத்து. மனித இனத்தையே தன்னுடைய நாத வெள்ளத்தால் கட்டுண்ட நிலையில் வைத்திருக்கும், இசையின் உண்மையான குறிக்கோள் குறித்து பல அறிஞர்கள் விளக்கங்கள் அளித்திருந்தாலும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ''இசை என்பது, மக்களிடையே இசைவை ஏற்படுத்தவல்ல ஓர் உணர்வு''என்று கூறிய கருத்தை, நான் நினைவுபடுத்தி மகிழ்கிறேன்.''

''இசைக் கலையும், நாடகக் கலையும் இணைபிரியாதவை. நாட்டியக் கலைக்கு அடிப்படை பாடல்கள். அந்தப் பாடல்கள் நாட்டுப் பாடல்களாகவும், பக்திப் பாடல்களாகவும், நாட்டியத்துக்கே உரித்தான நாட்டியப் பாடல்களாகவும் விளங்குவதைப் பார்க்கிறோம்.''

''தமிழகத்தின் கலை வடிவங்களிலேயே, மிகத் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒரு கலை, நாடகக் கலையாகும். மொழியை இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்த சிறப்பை உடையவர்கள் நாம். நாடகத் தமிழ் வாயிலாக, தமிழ் மொழி உணர்வு வளர்ந்தது; நாட்டுப் பற்று வளர்ந்தது; தேசிய உணர்வு வளர்ந்தது.''

- டாக்டர். **ஜெ. ஜெயலலிதா**
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்.

# எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

## கலை நிகழ்ச்சிகள் குழு

| | | |
|---|---|---|
| **பேராசிரியர் . க . பொன்னுசாமி**<br>மாண்புமிகு கல்வியமைச்சர் | — | தலைவர் |
| **திரு . அ . மா . பரமசிவன்,**<br>மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் | — | துணைத் தலைவர் |
| **திரு . ச . பார்த்தசாரதி,** இ . ஆ . ப .,<br>அரசுச் செயலர்,<br>செய்தி மற்றும் சுற்றலாத்துறை | — | உறுப்பினர்—செயலர் |
| **திரு . மா . விசுவநாதன்,**<br>துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)<br>செய்தி மற்றும் சுற்றாலாத்துறை | — | அலுவல்— உறுப்பினர் |
| **திரு . ஆர் . குன்னக்குடி வைத்தியநாதன்**<br>தலைவர்,<br>தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . ஆர் . எஸ் . மனோகர்,**<br>உறுப்பினர்—செயலர்,<br>தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . ஆஸ்டின்,** எம் . பி .,<br>கன்னியாகுமரி மாவட்டம் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . வெ . தமிழரசு,** எம் . எல் . ஏ .,<br>ஆத்தூர் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . ஏ . டி . செல்லசாமி,** எம் . எல் . ஏ .,<br>ஒட்டன்சத்திரம் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திருமதி . பா . வளர்மதி**<br>தலைவர்,<br>தமிழ்நாடு உப்பு வாரியம் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . இராஜரெத்தினம்**<br>திருச்சிராப்பள்ளி | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . எஸ் . எம் . வேலுச்சாமி**<br>செங்கத்துறை,<br>கோயம்புத்தூர் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . கே . பி . பாலகிருஷ்ணன்**<br>கரூர் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **பேராசிரியர் . கு . ப . கண்ணன்**<br>புதுக்கோட்டை | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **திரு . எஸ் . முருகுமணி**<br>கடலூர் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| **டாக்டர் . கு . வை . பாலசுப்பிரமணியன்**<br>தஞ்சாவூர் | — | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |



# கலை

## நிகழ்ச்சிகள்



# திரு. ஷேக் சின்ன மௌலானா

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஷேக் சின்ன மௌலானா மிக இளம் வயதில் நாதசுர இசைப் பயிற்சியைத் தொடங்கினார். தமது தந்தையான திரு.ஷேக் காசிம் சாகிப் அவர்களிடம் தொடக்க காலத்திலும், பின்னர் திரு.ஆடம் சாகிப் அவர்களிடமும் இசைப் பயிற்சியை மேற்கொண்டார். 'தஞ்சாவூர் பாணி' நாதசுர இசை முறையைக் கற்றுக் கொள்ள விரும்பி, நாச்சியார் கோயில், திரு.ராஜம், திரு.துரைக்கண்ணன் சகோதர்களிடம் பயிற்சி பெற்றார். பின்னர் ஸ்ரீரங்கத்தில் தங்கி இளம் தலை முறையினரிடையே நாதசுர இசைக் கலையைப் பரப்ப சாரதா நாதசுர சங்கீத ஆலயத்தை நிறுவினார். திருவையாறு மன்னர் இசைக்கல்லூரியில் கௌரவப் பேராசிரியராகச் செயல்பட்டு வருகிறார்.

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். சோவியத் யூனியனில் நடைபெற்ற இந்தியக்கலை விழாவிலும்(1987) ஜெர்மனியில் நடைபெற்ற இந்தியக் கலை விழாவிலும் இவரது நாதசுர இசை நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றுள்ளன. கீழை நாடுகள்–மேலை நாடுகள் கலைப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 1973ஆம் ஆண்டு அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் நிகழ்ச்சி நடத்தச் சென்ற போது நியூயார்க் நகரின் வாசர் கல்லூரி இவருக்கு 'நாதசுர ஆச்சாரியா' என்ற விருதை வழங்கி கௌரவித்தது. ஹாங்காங்கில் நடைபெற்ற ஏழாவது இந்தியக் கலை விழாவில் இந்தியக் கலைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் 'கலைமாமணி' விருது, மைலாப்பூர், ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பின் 'சங்கீத கலா நிபுணர்', தமிழ் இசைச் சங்கத்தின் 'இசைப் பேரறிஞர்', 'சங்கீத நாடக அகாடமி விருது' போன்றவை இவர் பெற்ற விருதுகளில் சிலவாகும். இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருது 1977 ஆம் அண்டு இவருக்குக் கிடைத்தது.

# டாக்டர் எம்.பாலமுரளி கிருஷ்ணா

சிறந்த இசைக் கலைஞராகவும், புல்லாங்குழல், வயலின்,வீணை ஆகியவற்றில் மேதையாகத் திகழ்ந்தவருமான திரு. பட்டாபி ராமையா அவர்களுக்கும் சிறந்த வீணை வித்வானாகத் திகழ்ந்த திருமதி சூரிய காந்தம்மா அவர்களுக்கும் மகனாக 1930ம் ஆண்டு பிறந்தார். இசைப் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் வாய்ப்பாட்டுக் கலையில் மட்டுமல்லாமல் இசைக்கருவிகள் மீட்டுவதிலும் தேர்ந்தவர். வயலின், வீணை, மிருதங்கம், கஞ்சிரா போன்றவற்றில் தேர்ந்த பயிற்சி பெற்றவர்.

இவரது முதல் அரங்கேற்றம் எட்டாவது வயதில் நடந்தது. தமிழிலும், தெலுங்கிலும் இவரே பாடல்கள் இயற்றி, அதற்கு இசையும் அமைத்திருக்கிறார். மகதி, கமுக்கம் போன்ற புதிய ராகங்கள் சிலவற்றை இவர் கண்டுபிடித்துள்ளார். இவர் திரைப்படங்கள் சிலவற்றிலும் நடித்துள்ளார். சில திரைப் படங்களுக்கு இசையும் அமைத்துள்ளார். இவற்றில் சிலவற்றைப் பாராட்டி விருதுகளும் தேசிய அளவில் கிடைத்துள்ளன. இவர் அடைந்த உயர்ந்த விருதுகளில் சில மியூசிக் அகாடமி, சங்கீத கலாநிதி விருது, பத்மஸ்ரீ, பத்ம விபூஷன் போன்றவையாகும். டாக்டர் பால முரளி இந்த நூற்றாண்டின் உயர்ந்த இசைக் கலைஞராவார்.

சங்கீத மகோபாத்யாயா, சங்கீத பூபதி,கலா சரஸ்வதி, அன்னமாச்சர்ய வித்வான் மணி போன்றவை இவருக்குத் தரப்பட்ட பட்டங்கள். லதா மங்கேஷ்கர் விருதையும், விஸ்டம் வழங்கும் 1992-ம் ஆண்டிற்கான சிறந்த மனிதர் விருதையும் இவர் பெற்றுள்ளார். தமிழ், ஒரியா, மராத்தி, தெலுங்கு, பெங்காலி, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் பாடல்களைப் பாடியுள்ளார்.

தமிழ்நாட்டின் மாநில இசைக் கலைஞராகவும், திருப்பதி தேவஸ்தானம், சிருங்கேரி பீடம் ஆகியவற்றின் ஆஸ்தான வித்வானாகவும் இருந்திருக்கிறார். அமெரிக்கா,



கனடா, இத்தாலி, பிரான்ஸ், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து போன்ற வெளிநாடுகளில் இசைப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார். 'முரளிநவாளி' என்ற நிறுவனத்தை அமைத்து நோய்களைக் குணமாக்க இசையைப் பயன்படுத்தலாமா என்பதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

# பம்பாய் சகோதரிகள்

கேரளாவின் திரிச்சூரில் பிறந்த பம்பாய் சகோதரிகள் எனப்படும் திருமதி சி.சரோஜா, திருமதி சி.லலிதா ஆகியோரின் தாய் தந்தையர் திரு.என்.சி.ஐயர், திருமதி முக்தாம்பாள் ஆகியோராவர். பம்பாயில் கல்வி கற்றவர்கள். இவர்கள் கர்நாடக இசைப் பயிற்சி பெற மறைந்த திரு எச்.ஏ.எஸ்.மணி தூண்டுகோலாயிருந்தார். இந்திய அரசின் கலாச்சார உதவித் தொகையை இருவரும் பயிற்சியின்போது பெற்றுள்ளனர். உதவித் தொகையைக் கொண்டு தீவிரமாக இசைப் பயிற்சி பெற சென்னைக்குக் குடிபெயர்ந்தனர். அரசு இசைக் கல்லூரியில் சேர்ந்து இசை அறிவு பெறத் துவங்கினர்.

ஸ்ரீ கிருஷ்ண கான சாபாவின் 'சங்கீத சூடாமணி', மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸின், 'சங்கீத கலா நிபுணர்கள்' தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி' ஆகியவை இவர்கள் பெற்ற விருதுகளில், பட்டங்களில் சிலவாகும்.

1983 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், மலேயா, அரபு



நாடுகள் போன்றவற்றில் இசை நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

# திரு. டி.எல்.மகராசன்

திரு.டி.எல். மகராசன் தமிழ்த் திரைப்படத்தின் சிறந்த பின்னணி பாடகர்களில் ஒருவரான மறைந்த திரு. திருச்சி லோகநாதன் அவர்களின் மகனாவார்.

சங்கீத கலாநிதி முடி கொண்டான் வெங்கட்ராமய்யர் அவர்களின் சீடர் திரு.மாயூரம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் அவர்களிடம் முறையாக கர்நாடக சங்கீதம் பயின்றவர்.

இவரின் நிகழ்ச்சிகள் கர்நாடக சங்கீத இசை நிகழ்ச்சிகளாக, தமிழ் இசை நிகழ்ச்சிகளாக, பக்தி இன்னிசை மற்றும் மெல்லிசை நிகழ்ச்சிகளாக தமிழகத்திலும் மற்ற மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிரான்சு, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற அயல்நாடுகளிலும் நடைபெற்றுள்ளன.

ஐந்தாம் உலகத் தமிழ்நாட்டின் முதல் நாளில் தமிழிசை நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு இவருக்கு வழங்கப்பட்டது.

இவரின் 2500க்கு மேற்பட்ட பக்திப் பாடல்களும், தமிழிசைப் பாடல்களும் தனி இசைத் தட்டுகளாக, ஒலி நாடாக்களாக வெளி வந்துள்ளன. திரைப்படங்களுக்கு பின்னணி பாடியுள்ளார். வானொலி, தொலைக்காட்சியில் 1500க்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

பத்து வயதில் தொடங்கி முப்பது ஆண்டுகளாக தமது இசைப் பணியைத் தொடர்ந்து வருகிறார்.



இசைச் செல்வர், இசைத் தென்றல், தமிழிசைப் பாணர், அருள் இசைச் செம்மல், இசைச் செல்வம் போன்றவை இவருக்கு பல்வேறு கலை நிறுவனங்கள் வழங்கிய பட்டங்களுள் சிலவாகும்.

# செல்வி எஸ்.செளம்யா

டாக்டர். எம்.சுந்தரேசன் அவர்களின் புதல்வியான செல்வி எஸ்.செளம்யா 1969-ஆம் ஆண்டு பிறந்தவர். தந்தைதான் இவரது முதல் குரு. பின்னர் கர்நாடக இசை மேதையான டாக்டர் எஸ். இராமநாதன் அவர்களிடம் பாட்டு கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். கூடவே பள்ளி, கல்லூரிப் பாடங்களில் கவனம் செலுத்தினார். 15 ஆண்டுகள் டாக்டர் இராமநாதன் அவர்களிடம் குருகுல வாசம்.

குருநாதர் விருப்பப்படி கர்நாடக இசையில் பதம், ஜாவளி ஆகியவற்றில் பயிற்சி பெற, அதில் நல்ல புலமைபெற்ற முக்தாவிடம் பயிற்சியைத் துவங்கினார். 10 ஆண்டுகள் அங்கு பயிற்சி. கூடவே டாக்டர் இராமநாதன் அவர்களிடமும் தொடர்ந்து பயிற்சி. 1982ஆம் ஆண்டு கரூருக்கருகில் உள்ள நெரூரில் சதாசிவ பிரம்மேந்திர ஆராதனை விழாவில் இவரது முதல் கச்சேரி அரங்கேற்றம்.

தற்போது முழுநேரப் பாடகியாகப் பரிமளித்து ஏறத்தாழ 400க்கு மேற்பட்ட கச்சேரிகளை நிகழ்த்தியுள்ளார். இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில் தமிழ்ப் பாடல்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளார். கோபால கிருஷ்ண பாரதியார், பாபநாசம் சிவன் ஆகியோரின் பாடல்களிலும் அருணாசலக் கவிராயர், தண்டபாணி தேசிகர், சுப்ரமணிய பாரதியார், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தாயுமானவர் ஆகியோரின் பாடல்களிலும், திருப்புகழ், தேவாரம், காவடிச் சிந்து போன்றவற்றிலும் ஆழ்ந்த ஞானம் பெற்றவர். இராமலிங்க அடிகளின் 'அருட்பாக்களை' ஒலி நாடாவாகக் கொண்டு வந்துள்ளார்.

தமிழிசைச் சங்கத்தின் இராஜாஜி தம்புரா விருது, அண்ணாமலை வள்ளல் விருது, பாரத் கலாச்சாரின் 'யுவகலா பாரதி விருது', மியூசிக் அகடாமியின் 'எம்.எல்.வி. விருது',



'டி.கே.பட்டம்மாள் விருது', 'டி.வி.சுப்பாராவ் விருது', போன்றவை இவர் பெற்ற விருதுகளில் சிலவாகும்.

எம்.எஸ்.ஸி., வேதியல் படிப்பில் தங்கப் பதக்கம் பெற்றவர். அறிவியலையும் இசையையும் இவர் தன் இரு கண்களாகக் கருதுகிறார். இருப்பினும் இசையையே தன் மூச்சாகக் கொண்டுள்ளார் இந்த இளம் பாடகி.



## திரு. பி. உன்னிகிருஷ்ணன்

இன்றைய இளைய சமுதாயத்தில் முன்னணியில் இருக்கும் இளம் பாடகர் திரு. பி. உன்னிகிருஷ்ணன். இனிமையான குரல் வளமும், இசைக் கலையில் முதிர்ச்சியும் இவரின் வரப்பிரசாதங்கள்.

திரு. வி. எல். சேஷாத்திரி அவர்களிடம் தமது ஒன்பதாவது வயதில் இசை பயில ஆரம்பித்தார். 1983 ஆம் ஆண்டில் சங்கீத கலாநிதி டாக்டர் வி. இராமநாதன் அவர்களின் முதன்மைச் சீடராக உருவெடுத்தார். பட்டதாரி ஆனபின் மீண்டும் 1987 ஆம் ஆண்டிலிருந்து இசைப் பயிற்சியைத் தொடர்ந்தார். பின்னர் வயலின் மேதை சாவித்திரி சத்யமூர்த்தி அவர்களிடம் பயிற்சி பெற்றார். கீர்த்திமிக்க ஒரு குருவிடமும் தேர்ந்த இசைஞானம் கொண்ட அவரது மாணவியிடமும் இசைத் திறமையை , இசையின் சாரத்தை பெற்றது பெருமைக்குரிய ஒன்றாகும்.

சிறந்த பாடருக்கான பல்வேறு விருதுகளை இவர் மியூசிக் அகாடமி, ஸ்ரீ கிருஷ்ண கான சபா, இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, நாரத கான சபா ஆகியவற்றிடமிருந்து பெற்றுள்ளார்.

1991 ஆம் ஆண்டில் பாரத் கலாச்சாரின் 'யுவகலா பாரதி' விருது இவருக்குக் கிடைத்தது. அதே ஆண்டில் அருமையான ஆலாபனைக்காக சிறப்புப் பரிசு ஒன்றை மியூசிக் அகாடமியிடம் பெற்றார்.







# திரு. பாபநாசம் அசோக் ரமணி

'தமிழ்த் தியாகையர்' எனப்படும் பாபநாசம் சிவன் அவர்களின் இசை உணர்வு அவரது குடும்பத்தார் அனைவரின் நாடி நரம்புகளிலெல்லாம் கலந்திருக்கிறது. அவரது இரு மகள்களான டாக்டர் ருக்மணி ரமணி, திருமதி நீலா இராமமூர்த்தி இருவரும் சிறந்த இசைக் கலைஞர்கள். மூன்றாவது தலைமுறையான இளைஞர் அசோக் ரமணி அவரது பாட்டனாரைப் போல் புகழ்பெற்று வருகிறார். இசைத் துறையில் மிருதங்கக் கலைஞராக அவர் உருவெடுத்தாலும் கூட கடந்த பத்தாண்டுகளில் பாடகராக பரிமளித்து வருகிறார்.

1964 ஆம் ஆண்டு தமது ஏழாவது வயதில் கும்பகோணம் ராஜப்பையர் அவர்களிடம் மிருதங்கம் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். தமது ஒன்பதாவது வயதில் பிரபல பாடகர்களான திரு. டி.கே.ஜெயராமன், திருமதி டி.கே.பட்டம்மாள், திரு டி.சி.சங்கரநாராயணன் ஆகியோருடன் மேடை ஏறினார்.

பதினொன்றாவது வயதில் தன் தாயிடமிருந்து வாய்ப்பாட்டுக் கலையைக் கற்றறிந்தார். பின்னர் ஐந்து ஆண்டுகள் டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்களிடம் பயிற்சி பெற்றார். பயிற்சிக் காலத்தில் ஸ்ரீகிருஷ்ண கான சபாவில் தமது முதல் பாட்டுக் கச்சேரியை நிகழ்த்தினார். இந்தியாவின் முக்கிய நகரங்களில் எல்லாம் இவரின் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

இதற்கிடையே கல்கத்தா திரு.கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமும் பாலக்காடு திரு.கே.வி.நாராயணசாமி அவர்களிடமும் தொடர்ந்து பயிற்சி பெறத் தொடங்கியுள்ளார்.



# திரு. டி.எம்.கிருஷ்ணா

இளைஞர்கள் அதிக அளவில் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டு வருவதும் கலைஞர்களாக உருவெடுத்து வருவதும் கர்நாட இசையின் வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாக இருக்கிறது.

18 வயது இளைஞரான திரு. டி. எம் கிருஷ்ணா 1988 ஆம் ஆண்டு முதல் இசைத் துறையில் ஈடுபட்டு வருகிறார். கலாபீடம் முதல்வர் திரு. சீதாராம் சர்மாவிடம் இசை பயின்றார். 1988 ஆம் ஆண்டு முதல் இந்திய அரசின் பண்பாட்டு ஆர்வ உதவித்தொகையைப் பெற்று வருகிறார். மியூசிக் அகாடமி, பாரத் கலாச்சார், கபாலி ஃபைன் ஆர்ட்ஸ், இசைக்கான இளைஞர் சங்கம் போன்ற மிகப் பிரபல சபாக்களில் இசை நிகழ்ச்சிகள் நடத்தி உள்ளார். 1992 ஆம் ஆண்டு மியூசிக் அகாடமி நடத்திய ''ஆலாபனை'' போட்டியில் விருது பெற்றார்.

இனிய குரலும், ஆழந்த ஞானமும் இவரின் இசைத் திறமைக்குச் சிறப்புச் சேர்த்து வருகிறது. புரந்தரதாசர் கீர்த்தனைகள், தில்லானா ஜாவளி, தமிழ்ப் பாடல்கள் போன்றவற்றை வெகு ஆர்வத்துடன் கற்றவர்.



# திரு. டி.என்.கிருஷ்ணன்

இசை உலகின் முதல் நிலை மேதைகளான அரியக்குடி, செம்மங்குடி, மதுரைமணி, ஜி.என்.பி., ஆலத்தூர் சகோதரர்கள் போன்றோருடன் இணைந்து இசை விருந்தளித்துள்ளார்.



பிற்காலத்தில், த்வாரம் வெங்கிடசாமி நாயுடு அவர்களை உதாரணமாகப் பின்பற்றி வயலின் கச்சேரியை தனியாக நடத்தத் தொடங்கினார். அதன் பின்னர் அவரது சீடர்களான அவரின் மகள் விஜி, மகன் ஸ்ரீராம் ஆகியோரும் இவரின் இசைக் கச்சேரிகளில் கலந்து கொண்டனர்.

திரு.டி.என்.கிருஷ்ணன் தமது தந்தையால் இசைக்கலையைக் கற்றறிந்தார். தமிழ்நாடு அரசின் இசைக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றத் துவங்கி 1978 முதல் 1985 வரை அக்கல்லூரியின் முதல்வராய்ப் பொறுப்பேற்றிருந்தார். பின்னர் சென்னைப் பல்கலைக் காலத்தில் 1985 முதல் 1993 வரை கர்நாடக இசைத் துறையின் தலைவராக விளங்கினார். சங்கீத நாடக அகாடமியின் தலைவர் பொறுப்பில் மூன்றாண்டுகள் பணியாற்றினார், கலிபோர்னியாவின் உலக இசை மையத்தின் பேராசிரியராக இருந்தவர்.

இந்தியாவிலும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சோவியத் யூனியன், ஆஸ்திரியா, யூகோஸ்லேவியா, சிங்கப்பூர், மலேசியா, போன்ற வெளி நாடுகளிலும் இவரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இந்திய அரசு 1974 ஆம் ஆண்டு ‘பத்மஸ்ரீ’ பட்டத்தையும்

1992 ஆம் ஆண்டு 'பத்மபூஷன்' பட்டத்தையும் இவருக்கு வழங்கி கௌரவித்தது. சங்கீத நாடக அகாடமியின் விருதைப் பெற்றவர். 'சங்கீத கலாநிதி', 'சங்கீத கலா சிகாமணி போன்றவை இவர் பெற்ற சிறப்புப் பட்டங்களாகும் வட அமெரிக்காவின் கர்நாடக இசைச் சங்கம் இவருக்கு 'சங்கீத சாகரா' என்ற பட்டத்தை வழங்கி உள்ளது.



# திரு. குன்னக்குடி வைத்தியநாதன்

தென்னிந்தியாவின் சிறந்த வயலின் மேதையான இவர் 1935 ஆம் ஆண்டு குன்னக்குடியில் திரு. ராமசாமி சாஸ்திரி அவர்களுக்கும் திருமதி மீனாட்சி அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார்.

தமது 12 வயதிலேயே ஆழ்ந்த இசை ஞானம் பெற்றிருந்த இவர், அரியக்குடி, செம்மங்குடி, மகராஜபுரம் போன்ற இசை மேதைகளின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். தமிழ்த் திரைப்படங்களில் 1965 ஆம் ஆண்டு முதல் இவரது வயலின் இசை இடம்பெற ஆரம்பித்தது. திரைப்பட இசையமைப்பாளராகப் பணிபுரிந்திருக்கிறார். சிறந்த திரைப்பட இசை அமைப்பாளருக்கான தமிழ்நாடு அரசின் விருது இவருக்குக் கிடைத்துள்ளது. இசைக்கு முக்கியத்துவம் தரும் திரைப்படங்களையும் இவர் தயாரித்து வெளியிட்டுள்ளார். இவரின் திறமையைப் பாராட்டி 'ராக ஆராய்ச்சி மையத்தின்' தலைமை ஆராய்ச்சியாளராக இவரை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நியமித்துள்ளார்கள். இம்மையத்தின் சார்பில் இவர் மேற்கொண்ட ஆராய்ச்சி பற்றிய விளக்கவுரை ஆற்ற வருகை தருமாறு ஜெர்மன் நாட்டுக்கு அழைக்கப்பட்டவர்.

அண்மையில் புதுடெல்லியில் இசை விழா ஒன்றையும் கருத்தரங்கத்தையும் நடத்தி உள்ளார்.

'கலைமாமணி விருது', 'இசைப் பேரறிஞர் விருது', 'வயலின் சக்கரவர்த்தி', 'எழிலிசை ஏந்தல்', 'திரை இசை மன்னன்', 'பாரத வயலின் வாத்திய பாஸ்கரா', 'வயலின் சாம்ராட்' ஆகியவை இவருக்குக் கிடைத்த பட்டங்களுள், விருதுகளுள் சிலவாகும்.

தனி வயலின் இசைக் கச்சேரிகள் நடத்தி 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, 'வயலின் இசைக் கலாநிதி' என்ற பட்டத்தை வழங்கி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இவரை கௌரவித்தார்கள்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக



மன்றத்தின் தலைவராகச் செயலாற்றி வருகிறார். சிருங்கேரி சாரதா பீடம், திருவாவடுதுறை ஆதினம், காஞ்சி காமகோடி பீடம் ஆகியவற்றின் ஆஸ்தான வித்வானாகவும் இவர் இருந்துள்ளார். திருவையாறு ஸ்ரீதியாக பிரம்ம மகோத்சவ சபாவின் செயலாளராகத் தொடர்ந்து இருந்து வருகிறார்.

# டாக்டர் சிட்டி பாபு

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் திரு. சலபள்ளி ரங்கா ராவ், திருமதி சுந்தரம்மா ஆகியோரின் ஒரே மகனாகப் பிறந்தவர் டாக்டர் சிட்டிபாபு. ஐந்து வயதில் வீணை மீட்டத் தொடங்கிய இவர் ஒரு முழுமையான வீணைக் கச்சேரியை தமது பனிரெண்டாவது வயதில் நிகழ்த்தினார். மகா மகோபாத்யாயா டாக்டர் ஏகானி சங்கரி சாஸ்திரி இவரின் குருவாவார்.

'வீணை என் வாழ்க்கையின் வழி' என்பது இவரது கொள்கையாகும் இந்தியாவிலும் இலங்கை, பல்கேரியா, யூகோஸ்லேவியா, ஹங்கேரி, மலேயா, சிங்கப்பூர், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஹாங்காங், லண்டன், பாரீஸ், ஆஸ்திரேலியா, பஹ்ரைன், சோவியத் யூனியன், ஜப்பான், மஸ்கட் ஆகிய வெளிநாடுகளிலும் இவரின் வீணைக் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன. இந்தியா மற்றும் அயல் நாட்டு வானொலி, தொலைக்காட்சிகளில் இவரின் நிகழ்ச்சிகள் ஒலி, ஒளிபரப்பாகி உள்ளன.

திக்கற்ற பார்வதி, கலைக்கோவில், உன்னைப் போல் ஒருவன், ஸ்ரீ இராகவேந்திரா வைபவம் ஆகிய திரைப்படங்களுக்கு இவர் இசை அமைத்துள்ளார்.



கலைமாமணி, சங்கீத நாடக அகாடமி விருது, சங்கீத சூடாமணி போன்ற 28 பட்டங்களும், விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

# டாக்டர் காரைக்குடி எஸ்.சுப்பிரமணியன்

காரைக்குடி சகோதரர்களில் ஒருவரான பிரபல வீணை இசைமேதை காரைக்குடி சாம்பசிவ ஐயர் குடும்பத்தில் பிறந்த ஒன்பதாம் தலைமுறையைச் சேர்ந்த வீணைக் கலைஞர் திரு.சுப்பிரமணியன். இவரது முன்னோர் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அரசவை இசைக் கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள்.

ஐம்பது வயதான திரு.சுப்பிரமணியன் இசையில் எம்.ஏ., பட்டம் பெற்றவர் அமெரிக்காவில் வெஸ்லியான் பல்கலைக் கழகத்தின் இசைத்துறையில் Ph.D., பட்டம் பெற்றவர்.



தற்போது சென்னைப் பல்கலைக்கழக இந்திய இசைத்துறையின் பேராசிரியராகப் பணியாற்றும் திரு.சுப்பிரமணியன் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஜெர்மனி, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பல்லாண்டுகளுக்கு மேலாக கருத்தரங்கங்களில் கலந்து கொண்டுள்ளார், விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார், நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

உலக அளவிலான நூல்களிலும் பத்திரிகைகளிலும் இவரது கட்டுரைகள் வெளி வந்துள்ளன. சிங்கப்பூர் நுண்கலைக்கழகம் இவரது ‘காந்தாராம்’ என்ற நூலை வெளியிட்டுள்ளது. இசை மற்றும் இசைக்கருவிகள் தொடர்பான இவரது ஆராய்ச்சிகள் 1986ஆம் ஆண்டு சென்னை தொலைக்காட்சி வழங்கிய ‘நாதங்கி’ தொடரில் ஒளிபரப்பாயிற்று.

# திருமதி காயத்ரி

''இசைப் பேரொளி'' திருமதி இ. காயத்ரி பிறவிக் கலைஞராகவே உருவெடுத்தவர். சென்னை வானொலியின் வீணைக் கலைஞரான திருமதி கமலா அஸ்வத்தாமா, பிரபல திரைப்பட இசையமைப்பாளர் மறைந்த திரு. ஜி. அஸ்வத்–



தாமா ஆகியோரின் மகளாக 1959ம் ஆண்டு பிறந்தார். தமது ஆறாவது வயதிலேயே வீணை மீட்டும் கலையை நன்கு கற்றறிந்தார். ஒன்பதாவது வயதில் திருவல்லிக்கேணியில் அருள்மிகு பார்த்தசாரதி சபாவில் இவர் கலந்துகொண்ட தியாகராஜ விழா இவருக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்தியா மற்றும் அயல் நாடுகளின் பல பாகங்களில் இவரின் வீணைக் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.

தமது ஒன்பதாவது வயதில் சங்கீத நாடக அகாடமி நடத்திய வீணை இசைக் கச்சேரியில் கலந்துகொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார். சென்னை 'ஆர்ட்ஸ் அகாடமி' இவருக்கு ''யாழிசைச் செல்வி'' என்ற பட்டத்தை வழங்கி உள்ளது. டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் இவருக்கு 'நாத சுதர்னவா' என்ற பட்டத்தை வழங்கி உள்ளார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ''கலைமாமணி'' பட்டம் பெற்றவர்.

வன விலங்கு தொடர்பான செய்திப் படத்திற்கு இசை அமைத்திருக்கிறார்.

சென்னை தெலுங்கு அகாடமியின் 'யுகாதி வேலுகு' விருதை டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் இவருக்கு வழங்கியுள்ளார். இவரின் வீணை இசை நிகழ்ச்சிகள் பல இசைத் தட்டுகளாக, ஒலி நாடாக்களாக வெளி வந்துள்ளன.

# திரு. ஆர்.விஸ்வேஸ்வரன்

இசைக் குடும்பம் ஒன்றில் தோன்றியவர் திரு.விஸ்வேஸ்வரன். பிரபல கர்நாடக இசை மேதை திரு.ஜி.என். பாலசுப்பிரமணியன் அவர்களின் மருமகன் இவர். வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகள் வாசிப்பதிலும் தேர்ந்தவர் திரு.விஸ்வேஸ்வரன்.

சந்தூர் மேதை பண்டிட் சிவகுமார் ஷர்மா அவர்களின் சீடர். ஒரு தலைமுறை ஆண்டுக்கு மேல் இவரிடம் இசை பயின்றார். இவரது குருநாதரின் ஆசிகளைப் பெற்று இந்துஸ்தானி இசையில் சந்தூர் பாடல்களை மேடையிலும் தொலைக்காட்சியிலும் அளித்து வருகிறார். இவரது நிகழ்ச்சிகள் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், மலேயா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகள் போன்றவற்றில் நடைபெற்று உள்ளன. இந்தியாவின் பல்வேறு முக்கிய நகரங்களிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தி உள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முன்னிலையில் இவர் வழங்கிய நிகழ்ச்சியும் சென்னையின் டிசம்பர் மாத இசை விழாவில் வழங்கிய நிகழ்ச்சியும் கல்கத்தாவில் சங்கீத ஆய்வு அகாடமி வழங்கிய நிகழ்ச்சியும் இவருக்கு மிகவும் பெருமை தேடித் தந்ததாகும். முன்ஷீ நூற்றாண்டு விழாவிற்காக லண்டன் பாரதீய வித்யா பவனில் நடைபெற்ற இவரின் நிகழ்ச்சியும் ஜவஹர்லால் நூற்றாண்டு விழாவிலும் பிரான்சிலும் நடந்த இவரின் நிகழ்ச்சிகளும் குறிப்பிடத் தக்கவைகளில் சிலவாகும்.



# திரு.மாண்டலின் யு.ஸ்ரீநிவாஸ்

பிறவி இசைக்கலைஞராக உருவெடுத்து மிக இளம் வயதிலேயே எல்லோராலும் பாராட்டப்படும் புகழின் சிகரத்தைத் தொட்டவர்.

ஆரம்பப் பாடங்களை தந்தையிடம் கற்று பின்னர் ருத்ராசு சுப்பராயா மற்றும் செம்பை வைத்திய நாத பாகவதர் ஆகியோரின் சீடராக பயிற்சி பெற்றார். இவரின் தந்தை இசைக்குழு ஒன்றில் கிளாரினெட் கலைஞராகப் பணியாற்றி வந்தார். மாண்டலின் இசையில் தேர்ந்த கலைஞராக திரு. ஸ்ரீநிவாஸ் அவர்களை உருவாக்கும் நோக்குடன் இவரது குடும்பம் ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னைக்குக் குடிபெயர்ந்தது.

இவரது தந்தையின், குருநாதரின் இவரைப் பறறிய எதிர்பார்ப்புகள் மிகச் சரியானதாக அமையத் தொடங்கின. 1984 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலக் கலைஞராக இவர் உருவானார். அனைத்துலக இளைஞர் ஆண்டையொட்டி ஸ்ரீகிருஷ்ண கான சபாவின் ''சங்கீத சூடாமணி'' விருது வழங்க இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸின் ''இசைப் பேரொளி'' பட்டத்தை முதன் முதலாகப் பெற்றவர் இவர்தான். 1991 ஆம் ஆண்டு இவருக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டது. காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வானாக இவர் 1990 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலியா, இந்தோனேசியா,



இங்கிலாந்து, மெக்ஸிகோ, கனடா, அமெரிக்கா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இவரின் மாண்டலின் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

பிரான்சில் நடைபெற்ற இந்தியக் கலை விழாவிலும், லண்டனில் நடைபெற்ற பாரதீய வித்யா

பவனின் பொன் விழாவிலும், ஸ்பெயினில் நடைபெற்ற ஒலிம்பிக் இசை விழாவிலும் இவரின் நிகழ்ச்சிகள் பல்லோரின் பாராட்டுக்களைப் பெற்றன.

கடந்த 12 ஆண்டுகளாக நிகழ்ச்சிகள் நடத்தி வரும் அனுபவத்தைக் கொண்டு மற்றவர்களுக்கு மாண்டலின் இசைப் பயிற்சி வழங்கவும் துவங்கியுள்ளார்.



# திரு. துர்கா பிரசாத்

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் இசைக்குடும்பம் ஒன்றில் 1963 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. ஏ. துர்கா பிரசாத்.

வீணை வித்வான் திரு அல்லம் வீராசாமி அவர்கள் இவர்களின் பாட்டனார். இவரின் தந்தையார் தற்போது கலாஷேத்ராவில் கோட்டு வாத்திய ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் ஏற்கெனவே சென்னை வானொலியில் கோட்டு வாத்திய வித்வானாக இருந்து ஓய்வு பெற்றவர்.

திரு. ஏ. துர்கா பிரசாத் தமது பனிரெண்டாவது வயதில் தந்தையார் மூலம் கோட்டு வாத்திய இசையைப் பயில ஆரம்பித்தார். மறைந்த கலைமாமணி திரு. ஏ. நாராயண அய்யரிடம் தமது இசைப் பயிற்சியைத் தொடர்ந்தார். 1979 ஆம் ஆண்டு முதல் கோட்டு வாத்திய இசை நிகழ்ச்சியை நடத்தத் துவங்கினார், வாய்ப்பாட்டில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர் இவர்.

கோட்டு வாத்திய நிகழ்ச்சிகளின் மூலம் கர்நாடக சங்கீதத்தில் பதினைந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். இந்தியாவின் முக்கிய நகரங்களில் எல்லாம் இவரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.



ரேடியோ சங்கீத சம்மேளனம், தொலைக்காட்சியின் தேசிய ஒளி பரப்பு இவற்றில் இவரின் நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது. 1994 ஆம் ஆண்டு திருவையாறு ஸ்ரீ தியாக பிரம்ம ஆராதனை விழாவின் தொடக்க நாளில் இவரின் நிகழ்ச்சி இடம் பெற்றது.

பல்வேறு கலைக்கூடங்களின் சார்பில் நடைபெற்ற இசைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளும் விருதுகளும் பெற்றுள்ளார்.



# சிக்கல் சகோதரிகள்

புல்லாங்குழல் இசையில் மிகப் பிரபலமானவர்கள் இந்த இரட்டையர்கள். சிக்கல் குஞ்சுமணி மூத்த சகோதரி, திருமதி நீலா இளைய சகோதரி.

சகோதரிகள் இருவரும் மட்டுமல்ல, இளைய சகோதரியான திருமதி நீலாவின் மகள் மாலா சந்திரேசகரும் சேர்ந்து மூவருமாக புல்லாங்குழல் நிகழ்ச்சி வழங்குவதும் உண்டு. சிறந்த மிருதங்க வித்வான்களாய்த் திகழ்ந்த தமது தந்தை ஆழியூர் நடேச ஐயர், தமது பாட்டனார் சாமி ஐயர் ஆகியோரின் தூண்டுதல் காரணமாக இவர்கள் கலைத் துறையில் ஆர்வம் கொண்டனர்.

சிக்கல் சகோதரிகள் இருவரும் இணைந்து இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் பல இசை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளனர். 1993ஆம் ஆண்டில் இவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது கிடைத்தது. ஸ்ரீ கிருஷ்ண கான சபா இவர்ளுக்கு 'சங்கீத சூடாமணி' விருதை வழங்கிச் சிறப்பித்தது. சங்கீத நாடக அகாடமியின் விருதும் மியூசிக் அகாடமியின் விருதுகளும் இவர்களுக்கு கிடைத்துள்ளன.





# திருமதி மாலா சந்திரேசகர்

சிக்கல் சகோதரிகளில் இளையவரான திருமதி நீலாவின் புதல்வியாவார் திருமதி மாலா. இச்சகோதரிகளிடமிருந்து தமது இரண்டாவது வயதில் இவர் புல்லாங்குழல் இசைப் பயிற்சியைத் தொடங்கினார். தமது பதிமூன்றாவது வயது முதல் புல்லாங்குழல் கச்சேரியை நிகழ்த்தி வருகிறார். பள்ளிகளுக்கிடையேயான, கல்லூரிகளுக்கிடையேயான பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றிருக்கிறார். இந்திய நுண்கலைக் கழகம் இவருக்கு நிகழ்ச்சிகள் பல நடத்துவதற்கு வாய்ப்புகள் வழங்கியுள்ளது. மியூசிக் அகாடமி சிறந்த புல்லாங்குழல் கலைஞருக்காக வழங்கும் 'புல்லாங்குழல் மாலி விருது' உட்பட பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருக்கிறார்.

சிக்கல் சகோதரிகளுடன் சேர்ந்து பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். அதேபோன்று லால்குடி ஜி. விஜயலட்சுமி, ஜெயந்தி



ராதாகிருஷ்ணன் ஆகியோருடன் ஒரு குழுவாக இணைந்து புல்லாங்குழல், வயலின் இசை விருந்தாக பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

ஒரு இசைக் குடும்பத்திலேயே இவருக்கு ஒரு வாழ்க்கைத் துணைவர் கிடைத்தது இவருக்குக் கிடைத்த கூடுதல் சிறப்பாகும்.



# மாஸ்டர் சஷாங்க்

நான்கு வயது சிறுவனான மாஸ்டர் சஷாங்க் புல்லாங்குழல் மேதை திரு.மாலி அவர்களிடம் அவர் இறப்பதற்கு ஏழு திங்கள்களுக்குமுன் நிறுத்தப்பட்டான். தன்னிடமிருந்த சிறிய புல்லாங்குழலைக் கொண்டு சில கீர்த்தனைகளை வாசித்துக் காட்டினான். அச்சிறுவனுக்கு மேலும் புல்லாங்குழல் பயிற்சி தேவையில்லை என்னுமளவிற்கு திறமை வெளிப்பட்டது. ''இவனை பாடகனாக்க யாராவது வாய்ப்பாட்டு வித்வானிடம் அழைத்துச் செல்லுங்கள். இவன் நிச்சயம் சிறந்த புல்லாங்குழல் மேதையாக உருவாவான்'' என்று திரு. மாலி அவர்கள் மந்திரவார்த்தைகளை மொழிந்தார். அச்சிறுவன்தான் சஷாங்க். இவனது தந்தையார் திரு.எம்.கே.சுப்பிரமணியம், பிரபல புல்லாங்குழல் மேதையும் திரு.மாலி அவர்களின் சீடருமான திண்டுக்கல் திரு.எஸ்.டி.நடராஜன் அவர்களிடம் பயின்றவர்.

மாஸ்டர் சஷாங்க் தனது 12 வயதிலேயே ராகங்களைத் தெளிவாகக் கண்டறிந்து சொல்லக்கூடிய திறமையைப் பெற்றிருந்தான். இவனுக்கு ஆரம்ப கால இசைப்பயிற்சியை அவனது தந்தையார் வழங்கினார். இவனுக்கு நான்கு வயதாகும்போது பன்னிரெண்டு வர்ணங்களையும், சில கீர்த்தனைகளையும் தெளிவாகக் கற்றிருந்தான். இவனுக்கு ஐந்து வயதாகும்போது கர்நாடக சங்கீத நாடக அகாடமி உதவித் தொகை வழங்கியது. பின்னர் ஆர் கே.ஸ்ரீகந்தன் அவர்களிடம் மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்றான். அதன்பின் இந்திய அரசின் உதவித் தொகையால் சங்கீத கலாநிதி பாலக்காடு கே.வி.நாராயணசாமி அவர்களிடம் இசை பயின்று முன்னிலைக்கு வந்தான்.

1989ம் ஆண்டு இச்சிறுவனுக்கு வயது 11 ஆகும்போது சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இச்சிறுவனின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1990ஆம் ஆண்டு மியூஸிக் அகாடமியில் நிகழ்ச்சி நடத்தினார். தொடர்ந்து சென்னையிலும் மற்ற இந்திய நகரங்களிலும் இவரது இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே அமெரிக்காவிற்கு ஒரு வெற்றிகரமான இசைப் பயணத்தை மேற்கொண்டவர் இவர்.

## திரு. சி. கே. பதஞ்சலி–திரு. சி. வி. மகாலிங்கம்

திரு. சி. கே. பதஞ்சலி – வயலின் கலைஞரான இவரின் பிறப்பிடம் சிவகங்கை.



வயது பதினேழு. புல்லாங்குழல் கலைஞரான திரு. சி. வி. மகாலிங்கம் தஞ்சாவூரில் பிறந்தவர். வயது பதினாறு.

வயலின், புல்லாங்குழல் இசைக்கலையில் அந்நாளில் பிரசித்தி பெற்றிருந்த திரு. ராமசேஷய்யர், திரு. வேதாச்சலம் அய்யர் ஆகியோரின் கொள்ளுப் பேரன்களாவர் இவர்கள். இவர்களது பாட்டனாரான கலைமாமணி திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் கர்னாடக இசைக் கலைஞராக அகில இந்திய வானொலியில் 40 ஆண்டு காலம் பணியாற்றியவர். காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வானாகவும் இருந்தவர். இவர்களின் தந்தையரான திரு. சித்தூர் குமேரசன், திரு. சித்தூர் வெங்கேடசன் ஆகியோர் சென்னை வானொலி நிலையக் கலைஞர்கள், காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான்களும் கூட.

திரு. சி. கே. பதஞ்சலி தமது ஏழாவது வயதில் புல்லாங்குழல் இசை பயிலத் தொடங்கினார். இவர்களின் அரங்கேற்றம் காஞ்சி பரமாச்சாரியார் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. திருவையாறு தியாக பிரம்ம ஆராதனை விழாவில் நிகழ்ச்சி நடத்தியவர். சென்னையில் பல்வேறு கலைக்கூடங்களிலும் பெங்களூர், மங்களூர், ஆகிய இடங்களிலும் இவர்களின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

இவர்கள் அகில இந்திய வானொலியின் குழந்தைகளுக்கான 'வாத்ய விருந்தா' சிறப்பு நிகழ்ச்சியில் இசை நிகழ்ச்சி வழங்கியுள்ளனர்.

## கவிஞர் ந.மா.முத்துக்கூத்தன்

கிராமியக் கலைகளான வில்லுப்பாட்டுக் கலையிலும், பொம்மலாட்டக் கலையிலும் சிறந்த விற்பன்னர்.

பல்வேறு நாடகக் குழுக்களில்



இடம்பெற்று நகைச்சுவை நடிகராகப் பங்கேற்றிருக்கிறார். திரைப்படங்கள் பலவற்றில் பலதரப்பட்ட பாத்திரங்களில் நடித்து தம் நடிப்புத் திறமையை வெளிக்காட்டி உள்ளார். இவர் திரைப்படப் பாடலாசிரியருமாவார்.

தமிழ் வரலாறு, தமிழறிஞர்களின் வரலாறு, மற்றும் சமூக விழிப்புணர்ச்சி ஊட்டும் கருத்துக்களைக் கொண்ட தலைப்புகளில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். சென்னை வானொலியிலும், தொலைக்–காட்சியிலும் இவரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் பல ஒலி, ஒளிபரப்பாகி உள்ளன.

பொம்மலாட்டக் கலையின் மூலம் மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சுற்றுப்புறச் சுகாதாரம், மக்கள் நல்வாழ்வு, மரம் வளர்ப்பு போன்ற பல்வேறு முற்போக்கு கொள்கைகளை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்.

தம்முடைய அனுபவங்களை முன்வைத்து ''கலை அறப் பேரவை'' (Kalai Trust) என்ற அமைப்பை உருவாக்கி வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், லாவணி ஆகிய கலைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவன இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், புதிய நிகழ்ச்சிளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ''கலைச் செல்வம்'' விருதினையும் இயல் இசை நாடக மன்றத்தின் ''கலைமாமணி'' விருதையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

# டாக்டர் பத்மா சுப்ரமணியம்

டாக்டர் பத்மா சுப்ரமணியம் உலகப்புகழ் பெற்ற நடனக் கலைஞர். மறைந்த திரைப்பட இயக்குநர் திரு கே.சுப்ரமணியம், தமிழ் சமஸ்கிருத மொழிகளில் பாடலாசிரியராகவும் இசை அமைப்பாளராகவும் விளங்கிய திருமதி மீனாட்சி ஆகியோரின் மகள் இவர்.

இசைக்கலையில் முதுகலைப் பட்டம் பெற்றவர் 'இந்திய இசை மற்றும் சிற்பங்களில் கர்ணங்கள்' பற்றி இவர் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற்றவர்.

இவர் ஒரு இசை அமைப்பாளர், நாட்டிய நாடக தயாரிப்பாளரும்கூட. 50 தனித்தனி நாடகங்கள் தவிர 12 நாட்டிய நாடகங்களையும் இவர் தயாரித்துள்ளார்.

இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சில நூல்களையும் எழுதியுள்ளார். நாட்டியம் தொடர்பான கருத்தரங்குகளையும் இவர் நடத்தியுள்ளார்.

டாக்டர் பத்மா சுப்ரமணியம் இந்திய அளவிலும் அகில உலக அளவிலும் பல விருதுகளையும் பல பட்டங்களையும் பெற்றுள்ளார். ஜப்பானில் மிகச் சிறந்த விருதான



'புகுவோகா கல்சுரல்' விருதினை அண்மையில் பெற்றார். கடந்த திங்களில் வழங்கப்பட்ட 'இசைப் பேரறிஞர்' விருதையும் சேர்த்து இதுவரை 37 விருதுகளை இவர் பெற்றுள்ளார். இந்திய அரசின் 'பத்மஸ்ரீ விருது', 'சங்கீத நாடக அகாடமி விருது', 'கலைமாமணி விருது', 'நாட்டியக் கலை அரசி', 'நாட்டிய சாஸ்திர வித்தகி', நிருத்ய சூடாமணி',

'சோவியத் நாட்டின் நேரு விருது' போன்றவையும் குறிப்பிடத்தக்கவையாகும். மத்தியப் பிரதேச அரசு இவரது திறமையைப் பாராட்டி 'காளிதாஸ் ஸம்மன்' என்ற விருதை வழங்கியுள்ளது. 'நிருத்யோதயா' என்ற தமது நாட்டியப் பள்ளியில் மாணவியர் பலருக்கு பயிற்சியளித்து வருகிறார். இக் கலைக்கூடத்தின் சார்பில் பரதநாட்டிய சாஸ்திரம் தொடர்பான செய்திப் படம் ஒன்றையும், தொலைக்காட்சித் தொடரையும் தயாரித்துள்ளார். இப்படத்திற்காக 'விஜில்' என்ற அமைப்பின் 'பஞ்சஜன்யம்' விருது கிடைத்துள்ளது.



# திருமதி கோமளா வரதன்

நாட்டியக் கலைஞர், எழுத்தாளர், புகைப்பட நிபுணர், இசையமைப்பாளர், நல்ல பேச்சாளர், சித்திரக் கலைஞர் என நானாவிதக் கலைகளில் திறமை மிக்கவர் திருமதி கோமளா வரதன்.



மொழிகள் பலவற்றைக் கற்றறிந்தவர். கர்நாடக இசையில் ஆழ்ந்த ஞானம் கொண்டவர். இவர் ஒரு பட்டதாரி. பத்திரிகையியலில் முதுகலைப் பட்டதாரி. இப்படிப்பில் 'குலபதி முன்ஷியின் பதக்கம்' பெற்றவர்.

வழுவூர் ராமையா பிள்ளை போன்ற சிறப்பு மிக்கவர்களிடம் பயிற்சி பெற்றவர். தமது ஒன்பதாவது வயதில் ஏ.சி.கமலாவாக மேடையில் தோன்றினார். வெளிநாடுகளில் கலைப் பயணத்தை தமது மூன்றாம் வயதில் துவக்கினார். 1983 ஆம் ஆண்டு கலைக்கூடம் என்ற கலை அமைப்பை நிறுவினார்.

இந்தியா எங்கும், வெளிநாடுகளிலும் தமது நாடக நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இந்தியாவின் சங்கீத நாடக அகாடமியில் மட்டுமல்ல ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளின் முக்கிய கலை நிறுவனங்களில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா, கஜீராகோ நாட்டிய விழா போன்ற சிறப்புமிக்க விழாக்களில் இவரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 1988 ஆம் ஆண்டு பிரான்சு நாட்டில் நடைபெற்ற அனைத்துலக நாட்டிய விழாவில் இவரின் நிகழ்ச்சி இடம் பெற்றது. 1994 ஆம் ஆண்டு 'எலஃபெண்டா' விழாவிலும் நாட்டிய நிகழ்ச்சி வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி விருது', 'இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது', 'பாரத நிர்மாண் விருது', 'சிங்கப்பூரில் நாட்டிய ராணி விருது' போன்றவை இவரைச் சேர்ந்த விருதுகளில் சில.

# திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன்

இந்தியாவின் சிறந்த நாட்டியக் கலைஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர் திருமதி. சித்ரா விஸ்வேஸ்வரன். சிறந்த நடனப் பயிற்சி ஆசிரியராகவும் விழங்கும் இவர் மிக இளம் வயதில் பயிற்சி பெற்று தேர்ந்த பரதக் கலைஞராக உருவானார். மணிப்புரி, கதக் போன்ற நாட்டியக் கலைகளிலும் தம் திறமையைக் காட்டி வருபவர்.

திருமதி டி.ஏ.ராஜலட்சுமி அவர்களை குருவாகக் கொண்டு 1959 முதல் 1970ஆம் ஆண்டு வரை பரதக்கலைப் பயிற்சி பெற்றார். பின்னர் வழுவூர் ராமையா பிள்ளை அவர்களின் மாணவியாக 4 ஆண்டுகள் பயின்றார். கர்நாடக சங்கீதத்திலும் ரவிந்திர சங்கீதத்திலும் இவருக்கு ஆழந்த ஞானமுண்டு.

'சிதம்பரம் அகாடமி' என்ற தமது கலைக் கூடத்தை 1975 ஆம் ஆண்டு துவக்கி அதன் இயக்குநராக, முதல்வராக, ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். தமது நாட்டிய நிகழ்ச்சிகள் மூலம் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பரதக் கலையைப் பரப்பி வருகிறார். நாட்டிய நாடகங்கள் பல தயாரித்துள்ளார்.

'பத்மஸ்ரீ', 'கலைமாமணி', 'நிருத்ய சூடாமணி', 'சங்கீத நாடக அகாடமியின் விருது'



போன்றவை இவருக்குக் கிடைத்த விருதுகளுள் சிலவாகும்.

# திருமதி சுதா ராணி ரகுபதி

கடந்த நான்கு தலைமுறைகளாக பரதக் கலைக்குப் பெரும் தொண்டாற்றி வருபவர் திருமதி சுதா ராணி ரகுபதி. தத்துவம் மற்றும் சமூகவியலில் பட்டதாரி. அமெரிக்க ஐக்கிய நாட்டில் நவீன நாட்டியம் மற்றும் அரங்கக் கலைகளைக் கற்று அறிந்தவர். திரு. யு. எஸ். கிருஷ்ணாராவ், கிட்டப்பா பிள்ளை, மைலாப்பூர் கௌரி அம்மாள், டி. சௌடய்யா, வித்வான் மதுரை என். கிருஷ்ணன் ஆகியோர் இசை நாட்டியக் கலைகளில் இவரின் குருநாதர்கள் ஆவர்.

இவரின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் இந்தியா தவிர ஐரோப்பா, அமெரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. 1952-53 ஆம் ஆண்டு முதல் பள்ளிகள், கல்லூரிகள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் ஏழை மாணவர்கள் போன்றோருக்கு உதவி புரியும் நிறுவனங்களின் வளர்ச்சி நிதிக்காக நாட்டிய நிகழ்ச்சிகளை இலவசமாக நடத்தியுள்ளார்.

நுண்கலைகளுக்கான ‘ஸ்ரீபரதாலயா’ என்ற அமைப்பை 1970 ஆம் ஆண்டு சென்னையில் தோற்றுவித்தார். பல்வேறு நாட்டிய நாடகங்களைத் தயாரித்துள்ளார்.

அனைத்து நாடுகள் மற்றும் மாநிலங்கள் அளவில் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்கம், மாநாடுகளில் கலந்து கொண்டு நாட்டியம், தத்துவம் தொடர்பான பல ஆய்வறிக்கைகளை வழங்கியுள்ளார். தொலைக்காட்சித் தொடர்களையும் வழங்கியுள்ளார். நியூயார்க் நகரில் நடைபெற்ற ‘மனித உரிமைகள் நாள்’ விழாவில் நிகழ்ச்சி நடத்த இவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

பாரம்பரிய கோயில் நாட்டியங்களைப் பயில சங்கீத நாடக அகாடமி இவருக்கு நிதி உதவி வழங்கி உள்ளது.



‘பத்மஸ்ரீ’, ‘கலைமாமணி’, ‘நாட்டிய கலாநிதி’, ‘நாடக சிரோமணி’, ‘நிருத்ய சூடாமணி’, ‘நாட்டிய ரத்னா’, போன்றவை இவருக்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க பட்டங்களாகும்.

# திருமதி இந்திரா ராஜன்

பரத நாட்டியமணியாகவும், சிறந்த நட்டுவனராகவும் பரிமளித்து வரும் திருமதி இந்திரா ராஜனின் குடும்பம் ஒரு கலைக் குடும்பம். இவரின் பாட்டி திருமதி சுந்தராம்பாள் பரத நாட்டியத்தில் விற்பன்னர். இவரது தாய் திருமதி சுந்தர காமாட்சி ஒரு இசைக் கலைஞர். இவரது தாய்மாமன் திரு.பாலசுப்பிரமணியம் மிருதங்க வித்வான். சிறந்த நட்டுவனர்களான திரு.கே.என்.தண்டாயுதபாணி பிள்ளை, திரு.கே.என்.பக்கிரிசாமி பிள்ளை ஆகியோர் இவரின் நெருங்கிய உறவினர்கள்.

குற்றாலம் 'கலைக் கொண்டல்' திரு.கணேச பிள்ளை அவர்களிடம் தமது ஆறாவது வயதில் குருகுல வாசத்தைத் துவக்கினார். ஒன்பதாவது வயதில் பழம்பெரும் நடிகர் திரு எம்.கே.தியாகராஜ பாகவதர் முன்னிலையில் இவரின் அரங்கேற்றம் நடைபெற்றது.

இந்தியாவின் பல்வேறு சபாக்களில் இவரின் நாட்டிய நிகழ்ச்சிகன் நடைபெற்றுள்ளன. மலேயா, இலங்கை ஆகிய இரு நாடுகளில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். அண்மையில் உத்திரப்பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளார். தென் மண்டல கலைப் பண்பாட்டு மையத்தின் சலங்கை விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, குடியரசு தின விழாவில் நடைபெற்ற நாட்டிய நிகழ்ச்சி ஆகியவை, இவரின் நிகழ்ச்சிகளில் மிகவும் குறிப்பிடத் தக்கவையாகும்.

நட்டுவாங்கம் செய்வதிலும் சிறப்பு பெற்றவர். உலகின் பல நாடுகளிலும் நடைபெற்ற திருமதி வைஜெயந்திமாலா பாலி, யாமினி கிருஷ்ணமூர்த்தி, அலர்மேல் வள்ளி போன்றோரின் நாட்டிய நிகழ்ச்சிகளில் நட்டுவாங்கம் பொறுப் பேற்றிருக்கிறார். இவரின் திறமையைப் பாராட்டி, இளம் கலைஞர்களுக்கு நட்டுவாங்கப் பயிற்சி அளிக்கும் பணியை புதுடெல்லி சங்கீத நாடக அகாடமி இவரிடம் ஒப்படைத்தது.

''வதினி நாட்டியாலா'' என்ற நமது நாட்டியப் பள்ளியை 1968ஆம் ஆண்டு துவக்கினார். இதுவரை இப்பள்ளியில் பயின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகளின் அரங்கேற்றங்கள் நடைபெற்றுள்ளன.



முருகா சரணம், சக்தி தரிசனம், குற்றாலக் குறவஞ்சி போன்றவை இவர் தயாரித்தளித்த நாட்டிய நாடகங்களில் சிலவாகும். திரைப்படங்கள் சிலவற்றிற்கு நாட்டிய நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்துள்ளார்.

''நாட்டிய கலா ரத்னம்'', இந்திய அரசின் நாட்டிய ''கலா பூஷண்'', தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ''கலைமாமணி'' தண்டாயுதபாணி நாட்டிய கலாலயத்தின் 'நாட்டிய பூடக அரசி' ஆகிய விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

# திரு. நரசிம்மாச்சாரி திருமதி வசந்தலட்சுமி

பரதநாட்டியம். குச்சுப்புடி ஆகிய நாட்டியக் கலைகளில் 'திறமையும் புகழும்படைத்த தம்பதியர் இவர்கள். இவர்களிருவரும் இணைந்து 1969ம் ஆண்டு முதல் நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்கள்.



இந்தியாவிலும் பல்வேறு அயல்நாடுகளிலும் இவர்களது நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ருக்மணி தேவி அருண்டேல், பத்மஸ்ரீ திரு.எம்.டி. ராமநாதன், திரு.பி.வி.ஜி.கே.ஷர்மா போன்ற கலைப் பாரம்பரியமிக்கோரின் வழியில் வந்தவர்கள் இவர்கள்.

திரு.நரசிம்மாச்சாரி இசை அமைப்பாளர், பாடகர், மிருதங்க வித்துவான் போன்ற பல திறமைகளை தன்னகத்தேக் கொண்டவர். திருமதி வசந்தலட்சுமி நட்டுவாங்கம் செய்வதில் நிபுணர். கலாசமர்ப்பணி என்று அழைக்கப்படும் அவர்களின் கலை நிறுவனத்தின் மூலம் பலரை உருவாக்கி நாட்டியக்கலைகளின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றி வருகிறார்கள். இவர்களின் மகள்களும் மாணவிகளுமான செல்வி லாவண்யா, செல்வி லஸ்யா ஆகியோரும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள்.

வெவ்வேறு தலைப்புகளில், இவ்விருவரும் தங்கள் மாணவிகளைக்கொண்டு 18 நாட்டிய நாடகங்களை தயாரித்து உள்ளார்கள்.

# டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன்

''நடனக்கலையின் செல்வம்'' என்ற பொருத்தமான அடைமொழியால் அழைக்கத் தகுதி பெற்றவர் இவர். தமது மூன்றாவது வயதில் நடனக் கலையைப் பயிலத் தொடங்கியவர். 7–வது வயதில் அரங்கேற்றம். அதற்கு மூன்றாண்டுகளுக்குப் பின் இந்தியாவிலும் பல வெளி நாடுகளிலும் நடன நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருப்பவர்.



வழுவூர் பள்ளியில் தமது ஆரம்ப காலப் பயிற்சியைப் பெற்றார். இவர் தேர்ந்தெடுத்த இத்துறையில் இவரின் சாதனைகள் அளவிடமுடியாதவை. 1981ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் நாட்டிய கலா மாநாட்டில், பங்கு பெற்ற மிக இளம் வயதுக் கலைஞர் இவர் தான்.

சென்னையில் மியூசிக் அகாடமி, ஸ்ரீ கிருஷ்ண கான சபா போன்ற பல்வேறு சபாக்களில் நடைபெற்ற டிசம்பர் மாத இசை விழாக்களில் மிக அதிக அளவில் கலந்து கொண்டிருகிறார். சிறந்த நடனமணிக்கென ஸ்ரீராம் குழுவினர் வழங்கிய விருதை முதன்முதலில் பெற்றார். மியூசிக் அகாடமி வழங்கிய டாக்டர் எம்.ஜி. ஆர் விருதைப் பெற்றவர். 'பாரத் கலாச்சார்' அமைப்பு இவருக்கு 'யுவ கலா பாரதி' என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

சிம்லாவில் நடைபெற்ற சங்கீத நாடக அகாடமியின் யுவஉத்சவ்,போபாலில் நடைபெற்ற கங்காரு விழா, கஜீராகோ விழா, நாட்டியாஞ்சலி விழா, மாமல்லபுரம் நாட்டிய விழா போன்ற புகழ்பெற்ற நிகழ்ச்சிகளில் இவரின் நாட்டியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அலகாபாத்தில் கும்பமேளா, பாண்டிச்சேரியில் டிஜீர் விழா, திருவனந்தபுரத்தில் நிஷாகாந்தி விழா போன்ற திருவிழாக்களிலும் இவரின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற அனைத்துலக மகளிர் நாள் விழாவிலும், உலக வங்கித் தலைவருக்கு வழங்கப்பட்ட விருந்திலும் நாட்டியமாடியது மறக்கவொண்ணா சிறப்பு வாய்ப்பு என்று கருதுகிறார்.

தமது தந்தையைப் போல் ஸ்ரீநிதியும் மருத்துவப் பட்டதாரி. தென்மண்டலப் பண்பாட்டு மையத்தின் நிர்வாகக் குழுவில் தமிழ்நாடு அரசு இவரை நியமித்துள்ளது.

# திருமதி சுஜாதா ஸ்ரீனிவாசன்

சுவாமிமலை திரு.எஸ்.கே.ராஜரத்தினம் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன், உடுப்பி, திரு.லட்சுமி நாராயணா, திருமதி கலாநிதி நாராயணன் போன்ற பல்வேறு குருநாதர்களிடம்



நாட்டியக் கலையைக் கற்றுக் கொண்டவர் திருமதி சுஜாதா ஸ்ரீனிவாசன். ஆரம்பக் காலத்தில் சரஸ்வதி கான நிலையத்தில் திருமதி லலிதா அவர்களிடம் தனது நாட்டியப் பயிற்சியைத் தொடங்கினார். இவரது அரங்கேற்றம் 1977ம் ஆண்டு நடைபெற்றது. கஜ்ராஹோ, பெங்களுர், புதுடெல்லி ஆகிய இடங்களில் நடைபெற்ற நாட்டிய விழாக்களில் கலந்து கொள்ள சங்கீத நாடக அகாடமி வழங்கிய வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. கஜ்ராஉறா விழாவில் கலந்து கொண்ட மிக இளைய கலைஞர் இவராகத் தான் இருக்க வேண்டும்.

இளம் நாட்டிய கலைஞருக்கான மியூசிக் அகாடமி வழங்கிய டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பரிசை இவர் பெற்றார். பாபநாசம் சிவன் பாடல்களைத் தொகுத்து இவர் அளித்த நாட்டிய நாடகம் 1990ஆம் ஆண்டு திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி, திரு.டி.கே.ஜெயராமன் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்று அவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது. இராமலிங்கர் பணி மன்றத்திற்காக இராமலிங்க அடிகளின் அருட்பாவிலிருந்து சில பகுதிகளை நாட்டியமாக்கி உள்ளார்.

வெளிநாடுகளில் இவர் நிகழ்த்திய நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சி இலங்கையில் நடந்ததாகும். ஜெனிவாவிலும் அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் நகரத்திலுள்ள வெங்கடேஸ்வரா ஆலயத்திலும் இவரது நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவர் தற்போது அமெரிக்காவில் ஒஹியோவில் குடி அமர்ந்துள்ளார்.

# செல்வி அகிலா சங்கர்

செல்வி அகிலா சங்கர் சென்னை எதிராஜ் கல்லூரி மாணவியாவார். 17.5.1976 அன்று பிறந்த இவர், திருமதி சித்ரா விஸ்வேஸ்வரனால்



நிறுவப்பட்ட சிதம்பரம் அகாடமியில் தனது ஐந்து வயது முதலே பரதம் கற்று வருகிறார்.

அகிலாவின் குரு அவரது அத்தையும் புகழ்பெற்ற நடனமணியுமான திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் ஆவார். அகிலாவின் அரங்கேற்றம் அவரது பத்தாவது வயதிலேயே நடைபெற்றது. அதே ஆண்டு காதி கிராமோத்யோக் நடத்திய போட்டியில் முதல் பரிசும் பெற்றார். திருமதி சித்ரா விஸ்வேஸ்வரனின் நாட்டிய நாடகங்களில் பங்கேற்பதே தனி நிகழ்ச்சிகளாகவும், சென்னையிலும் மற்ற இடங்களிலும் நடத்தியிருக்கிறார். தனது குருவுடன் நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்ரீலங்கா போன்ற அயல் நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்.

செல்வி அகிலா மத்திய அரசின் C.C.R.T. உதவித் தொகையும், சென்னை ஸ்ரீகிருஷ்ண கான சபாவின் 1989-90 ஆம் ஆண்டிற்கான 'ஸ்ரீமதிபால சரஸ்வதி என்டோவ்மென்ட்' விருதும் பெற்றிருக்கிறார். மேலும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் நான்கு நிகழ்ச்சிகளுக்கான நிதி உதவியைப் பெற்றவர் இவர்.

# செல்வி ஜி. லட்சுமி பிரியா



செல்வி ஜி.லட்சுமி பிரியா சென்னையில் பட்டப்படிப்பு பயின்று வருகிறார். திரு. நரசிம்மாச்சாரி, திருமதி வசந்தலட்சுமி ஆகியோரிடம் பரதம் பயின்றார். செல்வி லட்சுமி பிரியாவின் வயது பதினெட்டு.

இவரின் முதல் அரங்கேற்றம் சென்னை பாரதீய வித்யா பவனில் 20.2.92. அன்று நடைபெற்றது.

இந்திய நுண்கலைக் கழகத்தின் 1993-94ஆம் ஆண்டுக்கான சிறந்த நடனமணி விருதைப் பெற்றவர்.

திரு நரசிம்மாச்சாரி அவர்களின் 'கலா சமர்ப்பணா' குழுவின் நிகழ்ச்சிகளில் அதிகம் இடம் பெற்றுள்ளார். சென்னையின் பல்வேறு அரங்குகளில் இவரின் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

# திருமதி பிரியா சுந்தரேசன்



பிரபல நடனக் கலைஞரான கலைமாமணி சரஸ்வதி சுந்தரேசன் அவர்களின் மகள் திருமதி பிரியா சுந்தரசேன். இளம் வயது முதல் தமது தாயாரிடம் பரத நாட்டியம் மற்றும் குச்சுப்புடியில் பயிற்சி பெறத் தொடங்கினார். பரத நாட்டியத்தில் புகழ்பெற்ற பந்தநல்லூர் பாணி நடன பாவங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றார். மேடையில் 200க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளார். தொலைக்காட்சியில் ஏறத்தாழ 40 நிகழ்ச்சிகளை வழங்கி உள்ளார். நெடிய உருவம், புன்னகை தவழும் முகம், முழுமையான நாட்டியத்தை வழங்கும் பாங்கு இவரின் சிறப்பம்சங்களாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரி. இந்திய அரசின் கலாச்சாரத் துறையிடமிருந்து திறமைக்கான உதவித் தொகையைப் பெற்றவர். இந்தியாவில் மட்டுமல்லாது அமெரிக்கா, அந்தமான் போன்ற இடங்களிலும் நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளார்.

# செல்வி லாவண்யா மற்றும் செல்வி லாஸ்யா

பிரபல நாட்டிய தம்பதிகளான திரு. நரசிம்மாச்சாரி, திருமதி வசந்த லட்சுமி இவர்களின் புதல்விகள் செல்வி லாவண்யா, செல்வி லாஸ்யா. அன்றாட வாழ்க்கையில் நுண்கலைகள் திகழ்ந்த சூழலில் இவர்கள் வளர்ந்தது நல்ல பலனைத் தந்தது. இவர்கள் தமது பெற்றோர்களின் 'நாட்டிய சமர்ப்பணம்' என்ற கலைக் கூடத்தில் தமது பெற்றோர்களிடம் நாட்டியப் பயிற்சியைப் பெற்றனர். சங்கராபரணம் அறக்கட்டளையின் திரு.எம்.வெங்கடகிருஷ்ணன் 1988ம் ஆண்டில் இவர்கள் மேடையேற முதல் வாய்ப்பு கொடுத்தார்.



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் நேரு நூற்றாண்டு விழாவில் இவர்களின் நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது.



# திரு. ஜாகீர் உசேன்



திரு. ஜாகீர் உசேன் பரதத்தின் மேல் கொண்ட ஆர்வம் காரணமாக திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்களிடம் பரதம் பயின்றார்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இவரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. பரதத்தின் மீது இவர் காட்டும் அக்கறையால் இவருக்கு இந்திய அரசின் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



# டாக்டர் வேம்பட்டி சின்ன சத்யம்

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தின் குச்சுப்புடி கிராமத்தில் 1929 ஆம் ஆண்டு பிறந்தார் டாக்டர் வேம்பட்டி சின்னசத்யம். ஆரம்பக் காலத்தில் பள்ளியில் படித்துக் கொண்டே தேடபள்ளி திரு. பேரஞ்சிய சாஸ்திரி அவர்களிடம் மூன்று ஆண்டுகள் இசைப் பயிற்சி பெற்றார். பின்னர் திரு. வேதாந்தம் லட்சுமி நாராயண சாஸ்திரி என்ற மகா வித்வானிடம் பயின்றார்.



டாக்டர் வேம்பட்டி சின்ன சத்யம் 12 நாட்டிய நாடகங்கள் தயாரித்து வழங்கியுள்ளார். இந்நாட்டிய நாடகங்களில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்ட பத்மாவதி சீனிவாசம், கிருஷ்ணாபரியந்தம், ஹர விலாசம், சிவ ஹனுர்பங்கம் ஆகியவை மிகவும் புகழ் பெற்றவை. இன்று முக்கிய நாட்டிய மணிகளாகப் புகழப்படும் சுபா நாயுடு, மஞ்சு பார்கவி, கல்பலாதிகா, ஷோபா நடராஜன் போன்றோர் இவரால் உருவாக்கப்பட்டவர்களாவர். இவர் நடத்தி வரும் அகாடமியின் கிளை விசாகப்பட்டிணத்தில் இயங்கி வருகிறது. டாக்டர் வேம்பட்டி பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். அவற்றுள் சில தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது, மத்திய பிரேதச அரசின் காளிதாஸ் சம்மன் விருது, சங்கீத நாடக அகாடமி விருது ஆகியவையாகும்.

# திரு. தனஞ்செயன்

பரத நாட்டியக் கலையின் வளர்ச்சிக்கு



பெரும்பங்காற்றியவர்களில் இருவர் திரு. தனஞ்செயன், திருமதி சாந்தி தனஞ்செயன். இருவரும் கலாசேஷத்ராவில் பயின்ற முதகலைப் பட்டதாரிகள். இவர்கள் கலாஷேத்ராவில் 18 ஆண்டுகள் பணிபுரிந்து ருக்மணி தேவி அவர்களின் நாட்டிய கலைப் படைப்புகளில் முன்னணிக் கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள். இந்திய இசை மற்றும் நாட்டிய அமைப்பாக ''பரத கலாஞ்சலி'' என்ற நாட்டியப் பள்ளியை நிறுவியுள்ளார்கள்.

இத் தம்பதியர் உலகின் பல பகுதிகளிலும் தமது நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்கள். உலகெங்குமிருந்து பலர் இவர்களிடம் மாணவர்களாகச் சேர்ந்து பயிற்சிபெற விரும்புகின்றனர். அனைத்து உலக தரத்திற்கேற்றாற் போல் பழமை மற்றும் புதுமையான வகையில் 25 நாட்டியப் படைப்புகளை தயாரித்துள்ளனர்.

இவற்றில் சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று தேசிய ஒருமைப்பாடு குறித்தான ''ஐக்கிய பாரதம்'' என்ற நாட்டிய நாடகமாகும். இந்நாடகம் பல இடங்களில் நடத்தப்பட்டுள்ளது. தமிழ் மட்டுமல்லாது சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், இந்தி, மராத்தி, பெங்காலி ஆகிய மொழிகளிலும் நாட்டிய நாடகங்களை தயாரித்துள்ளார்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ''கலைமாமணி'' விருது, ஸ்ரீ கிருஷ்ண கான சபாவின் ''நிருத்ய சூடாமணி'' விருது, ''யுனெஸ்கோ விருது'' ஆகியவை இவர்கள் பெற்ற விருதுகள் மற்றும் பட்டங்களுள் சிலவாகும்.

''நாட்டியத்துள் ஒரு நாட்டியம்'' – திரு.தனஞ்செயன் எழுதிய ஒரு நூலின் தலைப்பு இது. இந்திய பரத நாட்டிய கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் இவர். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சங்கீத நாடக அகாடமி போன்ற நிறுவனங்களில் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்கள். நாட்டியம் தொடர்பாக பல்வேறு கருத்தரங்குகளையும் பணி அரங்குகளையும் நடத்தி உள்ளார்கள்.

# திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன்

'அபிநயா நாட்டியாலயா'வின் இயக்குநர் திருமதி கிருஷ்ண குமாரி நரேந்திரன் நாட்டியக் கலையில் குருவாக, சிறந்த நட்டுவனாராக புகழ்பெற்று விளங்குகிறார். இவர் 1964 ஆம் ஆண்டு நாட்டிய கலைஞராக உருவானார். இவரை ஒரு சிறந்த நாட்டியக் கலைஞராகவும் நடன ஆசிரியராகவும் உருவாக்கியவர் திருமதி இந்திரா ராஜன் அவர்கள்.

ஆண்டு தோறும் புதியதொரு நாட்டிய நாடகங்களை தயாரித்து வழங்குகிறார். 'மீனாட்சி கல்யாண லயவிநியாசம்' நவகிரஹ தெய்வங்கள், பன்னிரு மாத பவானி விழா, கருணைக் கடல் கந்தவேள் ஆகியவை இவர் தயாரித்து அளித்த நாட்டிய நாடகங்களில் சிலவாகும். ஒவ்வொரு நாட்டிய நாடகமும் பலமுறை நடத்தப்பட்டு உள்ளன. பிரம்மாண்ட தயாரிப்பாக அண்மையில் உருவான 'சக்தி சக்கரம்' என்ற நாட்டிய நாடகத்தில் 60 மாணவியர் பங்கு கொண்டனர். இந் நாடகத்திற்கு திரு. குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைத்துள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரும் பெரும் சாதனைகளைத் தொகுத்து 'திராவிட சக்தி' என்ற நாடகத்தை வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு இவருக்கு இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டது.



# திருமதி கே.ஜே.சரஸா

திரு.தண்டாயுதபாணி பிள்ளை அவர்களின் சகோதரியான திருமதி கே.ஜே.சரசா 1937ஆம்



ஆண்டு காரைக்காலில் பிறந்தவர். இவரின் முன்னோர்கள் தஞ்சை மன்னர்களின் அரசவைக் கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள்.

தமது ஏழாவது வயதில் வழுவூர் இராமையா பிள்ளை அவர்களிடம் பரதநாட்டியக் கலையைப் பயிலத் தொடங்கினார். இவரின் குருகுல வாசம் 15 ஆண்டுகள் தொடர்ந்தது. இவர் உலகெங்கும் பல நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கி உள்ளார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல மாணவியருக்கு பரதக் கலையில் பயிற்சி வழங்கியுள்ளார். நாட்டிய நாடகங்கள் பலவற்றைத் தயாரித்து வழங்கி உள்ளார். பரதக்கலைக்கு இவர் ஆற்றிய பணிக்காக சங்கீத நாடக அகாடமியின் விருது கிடைத்தது. ‘கலைமாமணி’, ‘நாட்டிய செல்வம்’ போன்ற பல பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு இசை மையத்தின் கௌரவ இயக்குநராக அண்மையில் இவர் நியமிக்கப்பட்டார்.

# செல்வி கவிதா ராமு

செல்வி கவிதா ராமு, சரசாலயாவில் பரதம் பயின்றவர். கலைமாமணி திருமதி கே.ஜே.சரசா இவரின் குருநாதர் ஆவார்.



மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நடைபெற்ற பொங்கல் நாட்டிய விழாக்களில் இவரது நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது. குற்றாலத்தில் சாரல் விழாவிலும், கொடைக்கானலில் கோடை விழாவிலும் நிகழ்ச்சிகள் நடைபெற்று உள்ளன. தென்மண்டல கலைப் பண்பாட்டு மையத்தின் சார்பில் நடைபெற்ற பழநி தைப்பூசத் திருவிழாவிலும், தஞ்சாவூரில் பிரஹதீஸ்வரர் கோயிலிலும் இவரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருப்பூரில் நடைபெற்ற கம்பன் விழாவில் பாலகாண்டத்தை நடன நிகழ்ச்சியாக நடத்திக் காட்டியுள்ளார். இதற்காக இவருக்கு கம்பன் கழகத்தால் 'நாட்டியச்சுடர்' என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

# செல்வி ஹேமா ஸ்ரீபால்

பரத நாட்டியக் கலையில் விற்பன்னரான கலைமாமணி கே. ஜே. சரசா அவர்களின் மாணவி செல்வி ஹேமா ஸ்ரீபால். ஏழாண்டுகள் தமது குருவிடம் இவர் பரதம் பயின்றார். இவரின் அரங்கேற்றம் 1989 ஆம் ஆண்டு பாரதீய வித்யா பவனில் நடைபெற்றது. பின்னர் ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட நாட்டிய நிகழ்ச்சிகளை இவர் வழங்கியுள்ளார்.

அமெரிக்க நாட்டில், லண்டனில் உள்ள முருகன் ஆலயத்தில், நாட்டியாஞ்சலி விழாவில், பாரத் கலாச்சார் சார்பில் நடைபெற்ற விழாவில், ஆர். ஆர். சபாவில், ஸ்ரீகிருஷ்ண கான சபாவில் நடைபெற்ற இவரின் நாட்டிய நிகழ்ச்சிகள், வளரும் இக்கலைஞரின் திறமைக்குச் சில சான்றுகளாகும்.

பரத நாட்டியக் கலைக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பதினைந்து வயதான



செல்வி ஹேமா ஸ்ரீபால் இக்கலையில் ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புகிறார்.

சங்கராபரணம் அறக் கட்டளையின் 'நாட்டிய கிஷோரி' விருது பெற்றவர் இவர்.

# திரு.ராஜா ரெட்டி திருமதி ராதா ரெட்டி

உலகப் பிரசித்தி பெற்ற நாட்டியக் கலைத் தம்பதியரான திரு.ராஜா திருமதி ராதா ரெட்டி ஆகியோர் தொன்மை வாய்ந்த கலையான குச்சுப்புடி நாட்டியத்திற்கு புதிய பரிமாணத்தை



வழங்கியுள்ளனர். குச்சுப்புடி நாட்டியத்தின் இன்றைய உயர்ந்த நிலைக்கு இவர்களின் பங்கு அளவிடற்கரியது.

நாட்டியக் கலை தோன்றிய ஆந்திர மாநிலத்தின் குச்சுப்புடி கிராமத்தில் தான் இவர்கள் பிறந்தார்கள். குச்சுப்புடி மேதைகளான வேதாந்தம் பிரகலாதா சர்மா, திரு. பி. வி. பி. கிருஷ்ண சர்மா ஆகியோரிடம் இக்கலையைப் பயின்றார்கள். புதுடெல்லியில் நாட்டியதரங்கம் என்ற கலைக்கூடத்தை நிறுவி இளங் கலைஞர்களுக்கு இக் கலையை பயிற்றுவித்து வருகிறார்கள்.

1984 ஆம் ஆண்டு இந்திய அரசின் 'பத்மஸ்ரீ விருது' இவர்களுக்கு வழங்கப்பட்டது. பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற அனைத்துலக நாட்டிய விழாக்களில் பங்கு கொள்ளும் முதல் இந்திய நாட்டிய கலைஞர்கள் என்ற சிறப்பை இவர்கள் 1974ம் ஆண்டில் பெற்றார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்ற இந்தியக் கலை விழாக்களில் இத் தம்பதியர் வழங்கிய நாட்டிய நிகழ்ச்சிகள் சிறப்புப் பெற்றவையாகும். இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து 1992ம் ஆண்டு கீர்த்திமிக்க 'சங்கீத நாடக அகாடமி' விருதை இத்தம்பதியர் பெற்றனர்.

# செல்வி சுதா

குச்சுப்புடி நாட்டியக்கலை ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குச்சுப்புடி என்ற கிராமத்தில் உருவானதாகும். அந்த அழகிய கிராமத்திலிருந்து இக்கலை நாட்டின் பல பகுதிகளிலும் பரவியுள்ளது.

இளம் நங்கையான செல்வி சுதா குச்சுப்புடி நாட்டியத்தில் சிறந்து புகழ்மிக்க கலைஞராக உருவாகி வ்ருகிறார். சிறந்த மேதையான வேம்பட்டி சின்ன சத்யம் அவர்களிடம் மிக இளம்வயதில் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டார். தொடர்ந்து வேம்பட்டி அவர்களின் சிஷ்யையான மஞ்சு பார்கவி அவர்களிடம் தமது பயிற்சியை தொடர்ந்து மேற் கொண்டு வருகிறார்.

முழுமையான நிறைவு அளிக்கும் வகையில் நாட்டிய நிகழ்ச்சியை வழங்க அக்கறையும் முயற்சிகளும் எடுத்துக் கொள்கிறார், இவரின் நிகழ்ச்சிகள் பல இடங்களில் நடைபெற்றுள்ளன.



## திருமதி பாரதி சிவாஜி

மோகினி ஆட்டக் கலைஞர் இவர். இக்கலையைப் பரப்ப டெல்லியில் 'கலா அம்பலம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

சந்ரோத்சவம், தேவகீதா, சோமஸ்துதி என்ற



நாட்டிய நாடகங்களை மோகினி ஆட்டக் கலைப் படைப்புகளாகத் தயாரித்துள்ளார். 'மோகினி ஆட்டக் கலை' என்ற தலைப்பில் ஒரு நூலையும் எழுதியுள்ளார். மோகினி ஆட்டம் பற்றிய செய்திப் படம் ஒன்றைத் தொலைக்காட்சிக்கென இவர் தயாரித்துள்ளார்.

நமது நாட்டின் பல பகுதிகளிலும் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், மெக்ஸிகோ, லத்தீன்–அமெரிக்கா, ரஷ்யா, ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகிய இடங்களில் நடைபெற்ற அனைத்து நாடுகள் அளவிலான நாட்டியத் திருவிழாக்களில் இவரின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

கேரளாவின் குஞ்சன் நம்பியார் நினைவு அறக்கட்டளை இவருக்கு 'லஸ்ய லட்சுமி' என்ற பட்டத்தையும் 'சர் சிங்கர் சன்சாட்' என்ற பம்பாய் நிறுவனம் 'நிருத்ய விலாஸ்' என்ற விருதையும் வழங்கி உள்ளன. மோகினி ஆட்டத்தில் இவரின் திறமையைப் பாராட்டி டெல்லி நிர்வாகம், சாகித்ய கலா பரீட்சாத் சம்மன் விருதை வழங்கி உள்ளது. 'நிருத்ய சூடாமணி'–ஸ்ரீ கிருஷ்ண கான சபா அண்மையில் இவருக்கு வழங்கிய பட்டம் இது.

## திரு. ஆர்.எஸ்.மனோகர்

நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் 1925-ம் ஆண்டு சேலத்தில் பிறந்தவர். 13 திரைப்படங்களில் கதாநாயகனாக



நடித்தார். எனினும் நாடகத்தின்பால் அவரது உள்ளம் நாட்டம் செலுத்தியது. எனவே திரைப்பட உலகில் உயர்ந்த நிலையிலிருந்த போதும் 1951-ம் ஆண்டில் நேஷனல் தியேட்டர்ஸ் என்னும் நாடகக் குழுவை நிறுவினார். இக்குழுவின் முதல் நாடகம் 'இன்ப நாள்' 'இலங்கேஸ்வரன்' நாடகம் இவரது வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்தியது.

ஆரம்பக் காலத்தில் புராண கதாபாத்திரங்களை ஏற்பதற்கு இவர் தயங்கினாலும் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு இலங்கேஸ்வரன் நாடகத்தில் இராவணனாக வேடம் தரித்தார். ஏறத்தாழ 200 படங்களில் திரு. மனோகர் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

துரோணர், மாலிக் கபூர், இந்திரஜித், சூரபத்மன், சுக்கிராச்சாரியார், பரசுராமர் கும்பகர்ணன் போன்றவை இவர் ஏற்று நடித்த

பாத்திரங்களில், நாடகங்களில் சில, இவரது நாடகங்கள் பிரம்மாண்டமான மேடை அமைப்புகளுடனும் வித்தியாசமான ஒலி ஒளி அமைப்புக்களுடனும் காண்போரை பிரமிக்க வைக்க வைப்பதாய் இருக்கும் நீண்ட இடைவெளிக்குப் பின் 'திருநாவுக்கரசர்' நாடகத்துடன் மீண்டும் மேடை ஏறி இருக்கிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். எஸ். மனோகர் சங்கீத நாடக அகாடமி விருது உட்பட பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.



# டாக்டர் எஸ். ராமானுஜம்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் டாக்டர் எஸ்.ராமானுஜம். 1935 ஆம்



ஆண்டு திரு.எம்.ஏ.சேஷன், திருமதி ரெங்கநாயகி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். நாடகப் பயிற்சி முகாம்கள் நடத்துபவராக, நாடகக் கல்வித் தொடர்பான குழுக்களில் ஆலோசகராக, நாடகக் கருத்தரங்கங்களில் சிறப்புப் பேச்சாளராக, நாடக இயக்குனராக இவ்வாறு நாடகம் தொடர்பான பல துறைகளிலும் செயல் புரிந்து வருகிறார். இந்தி, தமிழ், கன்னடம், மலையாளம், ஆங்கிலம் எனப் பல மொழிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்திருக்கிறார். டாக்டர் ராமானுஜம் அவர்களை, தமிழில் பத்தாண்டு காலத்திற்கும் மேலாக தீவிரமாகச் செயல்பட்டு வரும் நவீன நாடக அரங்கத்தின் முன்னோடி என்று கூறலாம்.

கள்ளிக் கோட்டை பல்கலைக் கழகத்தின் 'திருச்சூர்' 'ஸ்கூல் ஆப் டிராமா'வில் பணியாற்றி இருக்கிறார். தமிழ், மலையாள மொழிகளில் நாடகம் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார். நாடக நிபுணராக இவரை பல நிறுவனங்கள் அங்கீகரித்துள்ளன.

# திரு. இரா. பழனிச்சாமி

சேலம் மாவட்டத்தில் 1935ஆம் ஆண்டு பிறந்தார். சிறந்த நாடக ஆசிரியர். தந்தையார் திரு. இராமலிங்கையா, தாயார் திருமதி பெத்தக்காள். தமது பதினொன்றாவது வயது வரை பன்மொழி பண்டிதர் திரு. இராமசாமி அவர்களின் ஆதரவில் ஆறாம் வகுப்பு வரை படித்ததோடு அவரிடம் தனியே தமிழையும் தனிப்பாடமாகப் படித்தார்.

குடும்பச் சூழ்நிலையால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் 1946ஆம் ஆண்டு முதல் 1953 வரை ஸ்ரீபாலமுருகன் பாய்ஸ் கம்பெனி, தேவி நாடக சபா ஆகிய தொழில் முறை நாடகக் குழுக்களில் நடித்து வந்தார். பின்னர் நாடகங்களுக்கு பாடல்கள் எழுதிவந்தார். கலைமாமணி என். என். கண்ணப்பா குழுவின் சார்பாகவும் திரு. டி. கே. இராமச்சந்திரன் குழுவின் சார்பாகவும் நாடகங்கள் எழுதி அரங்கேற்றினார். நாடகக் காவலர் ஆர். எஸ் மனோகரின் 'இலங்கேஸ்வரன்' நாடகத்திற்கும், ஏறத்தாழ 25 திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதியுள்ளார்.

திரு ஆர். எஸ். மனோகரின் நேஷனல் தியேட்டர்சுக்கு 'சூரபத்மன்', 'சிசுபாலன்' ஆகிய புராண நாடகங்களை எழுதித் தந்தார் காரைக்காலம்மையார் திரைப்படத்தின் திரைக்கதை ஆசிரியர். 'பிள்ளையார்' என்னும் திரைப்படத்தின் திரைக்கதை வசனம் பாடலாசிரியர்.

'நாடகப் பண்ணை' என்னும் சொந்த நாடகக் குழுவைத் துவக்கி 1987 வரை மாவீரன் வாலி, காவியநாயகி, இளங்கோவடிகள் முதலிய நாடகங்களை எழுதி அரங்கேற்றினார் காவிய நாயகி நாடகத்திற்குத் தயாரிப்பு மான்யமாக



1986ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ரூபாய் பத்தாயிரம் வழங்கியது.

பழநி பதிப்பகம் எனற தமது பதிப்பகத்தின் மூலம் இளங்கோவடிகள் நாடகத்தை நூலாக வெளியிட்டு தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நாடகத்திற்கான முதல் பரிசைப் பெற்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடாக மன்றத்தின் 'கலைமாமணி விருது' பெற்றவர். 'விஸ்டம்' பத்திரிகை வழங்கி வரும் விருதும் இவருக்குக் கிடைத்துள்ளது.

# மாஸ்டர் வி. ஸ்ரீதர்

மாஸ்டர் ஸ்ரீதர் என்றழைக்கப்படும் திரு.வி.ஸ்ரீதர், பி.காம்., பட்டதாரி. பேரறிஞர் அண்ணா அவர்களால் 'எதையும் தாங்கும்



இதயம்' என்ற அவரது திரைப்படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக தமது 5வது வயதில் அறிமுகப்படுத்தப்பட்டார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழித் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

'குறத்தி மகன்' இவர் கதாநாயகனாக நடித்த முதல் படமாகும். மலையாள மொழியில் 'ஸ்நேகம்' என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்தார். வானொலி, தொலைக்காட்சித் தொடர்களிலும் மேடை நாடகங்களிலும், நடிகராக மட்டுமின்றி கதாசிரியர், கவிஞர், இயக்குநர், தயாரிப்பாளராகவும் திகழ்ந்து வருகிறார். சொந்தமாக நாடகக் குழுவும் நடத்தி வருகிறார்.

'நாரதர்', 'நரகாசுரன்', 'பரசுராமர்', 'வள்ளலார்', 'அருணகிரிநாதர்', 'திருஞான சம்பந்தர்', 'பக்த கண்ணப்பர்', 'முத்துசாமி தீட்சிதர்' போன்றவை இவர் ஏற்று நடித்த பாத்திரங்களில் சில.

பலரிடம் திரைப்படங்களில் இணை இயக்குநராகவும் பணியாற்றி உள்ளார்.

K.R.A. Associates, ✆ : 8254978.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

